28.10.2016

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### மஞ்சள் வணிக வளாகத்தில் தூய்மைப்பணி தீவிரம்

ரோடு: பெருந்துறை மஞ்சள் வணிக வளாகத்தில் தூய்மை இந்தியா திட்ட சிறப்பு முகாம் கடந்த, 15ல் தொடங்கியது. வரும், 31 வரை நடக்கிறது. ஈரோடு விற்பனைக்குழு செயலாளர் குழந்தைவேலு, மஞ்சள் வணிக வளாக கண்காணிப்பாளர் அர்ச்சுனன், மேற்பார்வையாளர் குமரேசன் மற்றும் பணியாளர்கள், எடையாளர்கள், விவசாயிகள், வாகன ஓட்டுனர்கள், சுமை தூக்கும் தொழிலாளர்கள், பொதுமக்கள் முகாமில் பங்கேற்று, மஞ்சள் வணிக வளாகம் பகுதியை முழுமையாக சுத்தம் செய்தனர். வாகனம் நிறுத்தும் இடம், மஞ்சள் மூட்டை அடுக்கி வைக்கும் இடம் உட்பட மொத்த வளாகத்திலும் உள்ள புல், புதர்களை அகற்றினர்.

### காளான் வளர்ப்பு பயிற்சி; ஆதிவாசி பெண்கள் ஆர்வம்

கூடலுார் : கூடலுாரில், காளான் வளர்ப்பு குறித்து, ஆதிவாசி பெண்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

நீலகிரி ஆதிவாசி நலச்சங்கம், 'சைல்ட் பண்ட்' அமைப்பு சார்பில், ஆதிவாசி இளம் பெண்கள், இளைஞர்கள் வாழ்வை, மேம்படுத்தும் வகை யில், காளான் வளர்ப்பு குறித்த ஒரு நாள் பயிற்சி முகாம், கூடலுாரில் நேற்று நடந்தது. ஒருங்கிணைப்பாளர் விஜயா வரவேற்றார். திட்ட மேலாளர் சிங்கராஜ் தலைமை வகித்தார்.

கூடலுார் தோட்டக்கலைத் துறை உதவி இயக்குனர் சிபிலாமேரி பேசுகையில்,“சுய தொழில் மூலம், எளிதாக வருவாய் ஈட்ட முடியும்; சிறிய இடத்தில் குறைந்த

செலவில் காளான் வளர்க்க முடியும். அதற்கான மூலப் பொருள்களும் எளிதாக கிடைக்கிறது; காளான் தவிர மேலும், பல்வேறு சுய தொழில்களை கற்று கொண்டு வருவாய் ஈட்ட முடியும்," என்றார்.தோட்டக்கலை அலுவலர் ஜெயலட்சுமி, காளான் வளர்ப்பு; அதற்கு தேவையான மூலப் பொருள்கள்; அதனை விபற்னை செய்வது குறித்து விளக்கினார். முகாமில், ஆதிவாசி இளைஞர்கள், பெண்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். புஷ்பகுமார் நன்றி கூறினார்.

## கால்நடை பராமரிப்பு திட்ட முகாம்

கம்பம், கம்பம் அருகே உள்ள ஏமரசு களத்தில் சிறப்பு கால்நடை பராமரிப்பு திட்ட முகாம் நடைபெற்றது. காமயகவுண்டன்பட்டி மருந்தகம் சார்பில் நடத்தப்பட்ட இந்த முகாமில், டாக்டர் காமேஷ்கண்ணன் தலைமையிலான குழுவினர் கால்நடைகளுக்கு சிறப்பு சிகிச்சையளித்தனர். தற்காலிக மலடு நீக்கம், செயற்கை முறை கருவூட்டல்,சினை பரிசோதனை போன்றவைகள் பார்க்கப்பட்டன. கால்நடைகள் வளர்ப்பவர்கள் பலர் அவற்றை கொண்டுவந்து சிகிச்சை பெற்றனர். கால்நடை ஆய்வாளர் ரஞ்சித்குமார் உள்ளிட்ட பணியாளர்கள் பங்கேற்றனர்.

## விவசாயிகளுக்கு பயிற்சி

தேவாரம், மதுரை வேளாண் கல்லூாரி மாணவிகள் கிராம தங்கல் திட்டத்தில் தேவாரம் பகுதியில் முகாமிட்டுள்ளனர்.

கிருஷ்ணம்பட்டி தென்னை விவசாயிகளுக்கு, கல்லுாரி ஆராய்ச்சி நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட தென்னை டானிக்கை வேர்மூலம் ஊட்டுவது குறித்து பயிற்சியளித்தனர்.

இந்த டானிக், தென்னையில் 20 சதவீத மகசூலை அதிகரிக்க தேவையான நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம் போன்ற ஊட்டச்சத்துகளும், சாலி சிலிக் அமிலம், ஆக்ஸிஜன், அஸ்கார்பிக் அமிலம் போன்ற சேர்க்கப்பட்ட வளர்ச்சி ஊக்கிகள் பற்றி விளக்கமளித்தனர்.

கள பயிற்சியில் மாணவிகள் தீபிகா, அகல்யா, ஐஸ்வர்யா, நீனா, லட்சுமி லாவண்யா, சரண்யா, ரம்யா செல்வி, மேகலா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## பந்தல் காய்கறி சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்

தேவதானப்பட்டி, பொம்மிநாயக்கன்பட்டியில் வறட்சி காரணமாக விவசாயிகள் பந்தல் காய்கறி சாகுபடியில் புடலை , பாகற்காய் சாகுபடி செய்துள்ளனர். கடந்த சில ஆண்டுகளாக விவசாயிகள் காய்கறி சாகுபடியில் ஆர்வம் காட்டி வருகின்றனர். குறிப்பாக கக்கரி, வெண்டை, தக்காளி, வெங்காயம் சாகுபடி செய்யப்படுகிறது. இந்நிலையில் பந்தல் காய்கறி சாகுபடிக்கு தோட்டக்கலைத்துறை, வேளாண் துறை சார்பில் மானியம் வழங்கப்படுகிறது. மேலும் சொட்டு நீர் பாசனம் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதனால் குறைந்த அளவு நீரைக் கொண்டு அதிகமான பரப்பளவில் சாகுபடி செய்ய முடியும் என்பதால் விவசாயிகள் இதில் ஆர்வம் காட்டுகின்றனர். பெரியகுளம் தாலுகா, பொம்மி நாயக்கன்பட்டியில் கண்மாய், குளம் போன்ற நீர்நிலைகள் இல்லை. மலைக்காலங்களில் ஓடைகளில் வரும் நீர் விவசாய கிணறுகளுக்கு ஆதாரமாக உள்ளது.

வறட்சி நிலவுவதால் விவசாய கிணறுகள் வறண்டுவிட்டன. சில இடங்களில் 500 அடிமுதல் 800 அடிவரை ஆழமாக போர் வெல் அமைத்து அதில் கிடைக்கின்ற நீரை பயன்படுத்தி பந்தல் காய்கறி சாகுடியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். குறிப்பாக புடலங்காய், பாகற்காய் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. புடலை நடவு செய்து 75 நாட்களுக்கு பிறகு பலன் கிடைக்கும். போதிய அளவு நீர் மற்றும் தொடர்ந்து உரமிட்டு பராமரித்து வந்தால் 6 மாதங்கள் வரை அதன் பலனை அனுபவிக்கலாம். இப்பகுதியில் விளைவதை தேனி, ஒட்டன்சத்திரம், வத்தலக்குண்டு, மதுரை, திருநெல்வேலி மார்க்கெட்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. தற்போது புடலை கிலோ ரூ.15 முதல் ரூ. 20, பாகற்காய் ரூ. 30க்கு மொத்த விற்பனை செய்யப்படுகிறது.

விவசாயி முருகன் கூறுகையில்,“ காய்கறிகளின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. பந்தல் சாகுபடியில் நீரின் தேவை குறைவாக உள்ளது. நடவு செய்த குறுகிய காலத்தில் பலன் கிடைக்கிறது.

தற்போது மழைக்காலம் என்பதால் விளைச்சல் அதிகமாக இருக்கும். விலை குறைவாக கிடைத்தாலும் பெரியஅளவில் பொருளாதார பாதிப்பு ஏற்படுவது இல்லை. இதனால் குறைந்த அளவு நிலம் வைத்துள்ள விவசாயிகள் கூட பந்தல்

காய்கறி சாகுபடியில் கவனம் செலுத்துகின்றனர். இதில் பராமரிப்பு செலவு குறைவாக உள்ளது,”என்றார்.

## பறவைக் காய்ச்சல் எதிரொலி: கோழிப்பண்ணைகளில் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரம்



நாமக்கல்: பல்வேறு மாநிலங்களில், பறவைக் காய்ச்சல் வேகமாக பரவி வரும் நிலையில், நாமக்கல் கோழிப்பண்ணைகளில் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

புதுடில்லி, கேரளம், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில், பறவைக் காய்ச்சல் பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அந்த மாநிலங்களில், பறவை காய்ச்சல் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கோழி, வாத்துகளை சுகாதாரத்துறையினர் அழித்து வருகின்றனர். இதனிடையே, அண்டை மாநிலமான, கேரளத்தில் பறவைக் காய்ச்சல் பரவியிருப்பது, நாமக்கல் மண்டலத்தில் அச்சத்தை உண்டாக்கியுள்ளது. இப்பகுதியில், 700க்கும் மேற்பட்ட கோழிப்பண்ணைகளில், ஐந்து கோடிக்கும் அதிகமான கோழிகள் வளர்க்கப்படுகின்றன. நாள்தோறும், நான்கு கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. கேரளாவுக்கு மட்டும், ஒரு கோடி முட்டைகள், இருந்து அனுப்பி வைக்கப்படுகின்றன. ஆனால், ஆலப்புழாவில், பறவைக் காய்ச்சல் கண்டறியப்பட்டுள்ளதால், தமிழகத்தில் இருந்து கொண்டு செல்லப்படும் முட்டைகளின் விற்பனை, கேரளத்தில் பாதிக்கும் நிலை உருவாகியுள்ளது. தற்போது, கால்நடைத் துறையினரிடம் இருந்து, சான்றிதழ்

பெற்று வரும், முட்டை லாரிகளுக்கு மட்டுமே, கேரளத்தில் அனுமதி அளிக்கப்படுகிறது. இதனிடையே, நாமக்கல் பண்ணையாளர்களும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். பண்ணைகளில் வெளியாட்கள் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளது. கோழித் தீவனம் கொண்டு வரப்படும் வாகனங்களில், கிருமி நாசினி தெளித்த பிறகே, பண்ணைகளுக்கு செல்ல அனுமதிக்கப்படுகிறது. பண்ணைகளில், தடுப்பு நடவடிக்கைகளை கண்காணிக்க, நாமக்கல் மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை சார்பில், 12 கால்நடை மருத்துவர்கள் தலைமையில், அதிவிரைவுப்படை அமைக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## மேட்டூர் அணைக்கு நீர் வரத்து அதிகரிப்பு

மேட்டூர்: மேட்டூர் அணைக்கு நீர் வரத்து விநாடிக்கு 91 கனஅடியில் இருந்துது 102 கனஅடியாக உயர்ந்துள்ளது. அணையின் நீர்மட்டம் 48 ஆகவும், நீர் இருப்பு 16.57 டி.எம்.சி.யாகவும் உள்ளது. காவிரி டெல்டா பாசனத்திற்காக, மேட்டூர் அணையில் இருந்து விநாடிக்கு 12,000 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது.

## காலிங்கராயன் பாசன பகுதியில் கசிவுநீரை கொண்டு காய்கறி சாகுபடி

ஈரோடு,:காலிங்கராயன் வாய்க்காலில் தண்ணீர் இல்லாததால் கசிவுநீரை கொண்டு நெல் பாசனம் செய்யப்பட்ட விளை நிலங்களில் தற்போது காய்கறி பயிர்களை சாகுபடி செய்யும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். காலிங்கராயன் வாய்க்கால் பாசனத்துக்கு ஆண்டுதோறும் ஜூன் 16ம் தேதி முதல் ஏப்ரல் இறுதி வரையிலும் தண்ணீர் திறக்கப்படுகிறது. சுமார் 800 ஆண்டு பழமை வாய்ந்த இவ்வாய்க்கால் காலிங்கராயன்பாளையத்தில் துவங்கி கொடுமுடி அருகே ஆவுடையார்பாறை பகுதியில் நிறைவு பெற்று நொய்யல் ஆற்றில் கலக்கிறது. காலிங்கராயன்பாளையத்தில் இருந்து வெண்டிபாளையம் கோணவாய்க்கால்

வரையிலும் சுமார் 6 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் ஆண்டுதோறும் நெல் சாகுபடி செய்வது வழக்கம். இந்த ஆண்டு கடும் வறட்சியால் ஆகஸ்ட் 8ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டு ஒரு மாதத்தில் தண்ணீர் நிறுத்தப்பட்டு விட்டது.

எனவே நெல் சாகுபடி செய்வதற்காக விட்ட நாற்றுகள் தண்ணீர் இல்லாமல் காய்ந்து போய் விட்டது. தற்போது வாய்க்காலில் வெறும் கசிவுநீர் மட்டுமே ஓடுகிறது. பல இடங்களில் வாய்க்காலையொட்டி உள்ள விளைநிலங்களில் குறைந்தளவில் தண்ணீர் கசிவுநீராக வருவதால் இதை பயன்படுத்தி பயிர் சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.அதன்படி சுண்ணாம்பு வாய்க்காலின் ஒரு பகுதியில் மணல் மூட்டைகளை அடைத்து வைத்து அந்த தண்ணீரை பயன்படுத்தி காய்கறி பயிர்களை சாகுபடி செய்யும் பணியில் ஒரு சில விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.இதேபோல வெண்டிபாளையம், காரை வாய்க்கால் பகுதியிலும் கசிவுநீரை பயன்படுத்தி கத்திரிக்காய், வெண்டைக்காய் போன்ற காய்கறி பயிர்களையும், ரோஜா, சாமந்தி போன்ற பூக்களையும் விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், ஆண்டுதோறும் காலிங்கராயன் பாசனப்பகுதியில் 3 போகம் நெல் பாசனம் நடைபெறும். இந்த ஆண்டு மழை இல்லாததால் ஒரு போகம் கூட நெல் சாகுபடி செய்ய முடியுமா என்ற நிலை ஏற்பட்டுள்ளது.
எனவே குறைந்தளவிலான நீரை பயன்படுத்தி காய்கறி சாகுபடியில் ஈடுபட முடிவு செய்து கத்திரி, வெண்டை, மலர் சாகுபடியில் ஈடுபட்டுள்ளோம். ஒரு சில விவசாயிகள் வெற்றிலையும் சாகுபடி செய்துள்ளனர். காய்கறி, மலர் சாகுபடிக்கு குறைந்த தண்ணீர் இருந்தாலே போதுமானது. எனவே இந்த ஆண்டு வெறும் தரிசு நிலமாக போட சங்கடப்பட்டு காய்கறி சாகுபடியில் ஈடுபட்டுள்ளோம், என்று தெரிவித்தனர்.

## 2வது சுற்று பாசனத்துக்கு திருமூர்த்தி அணையில் இருந்து விரைவில் தண்ணீர் திறப்பு

உடுமலை,: திருமூர்த்தி அணையில் இருந்து கோவை, திருப்பூர் மாவட்டத்தில் 3.75ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. இது 4 மண்டலமாக பிரித்து தண்ணீர் திறக்கப்படுகிறது. முதல் மண்டல பாசனம் கடந்த மார்ச் மாதம் முடிந்தது. ஆகஸ்ட் மாதம் 2ம் மண்டல பாசனம் நடைபெற வேண்டும். ஆனால் பரம்பிக்குளம் அணையில் தண்ணீர் இல்லை. இதனால் அங்கிருந்து திருமூர்த்தி அணைக்கு நீர்வரத்து கேள்விக்குறியாக இருந்தது.

மழை பெய்து செப்டம்பரிலாவது பாசனம் துவங்கும் என விவசாயிகள் எதிர்பார்த்தனர். இந்நிலையில் பரம்பிக்குளம் அணையில் குறைந்த நீர் இருப்பில் இருந்து சர்க்கார்பதிக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. அங்கிருந்து தண்ணீர் காண்டூர் கால்வாய் வழியாக திருமூர்த்தி அணைக்கு கடந்த மாதம் 11ம் தேதி திறக்கப்பட்டது. தொடர்ச்சியாக 25 நாட்கள் தண்ணீர் திறந்து விடப்பட்ட பிறகு கடந்த 6ம் தேதி முதல்சுற்று முடிந்தது. அதையடுத்து அணையில் இருந்து தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டது. தொடர்ந்து பரம்பிக்குளம் தண்ணீரால் அணை நிரப்பப்பட்டது. தற்போது நீர்மட்டம் 48 அடியாக உள்ளது.

## தீபாவளியை முன்னிட்டு பந்தய சேவல் விற்பனை அமோகம்

பொள்ளாச்சி, : பொள்ளாச்சி காந்தி மார்க்கெட்டின் ஒருபகுதியில், வியாழக்கிழமை தோறும் வாரச்சந்தை நடக்கிறது. இதில், மாட்டுச்சந்தை கூடும்போது, அதன் அருகேயே ஆடுகள் விற்பனைக்கு கொண்டுவரப்பட்டு ஏலம் விடப்படுகிறது. ஆடுகளை வாங்க உள்ளூர் மற்றும் வெளியூர்களில் இருந்து வியாபாரிகள் அதிகம் வருகின்றனர்.

இந்நிலையில், நாளை தீபாவளி பண்டிகை என்பதால், நேற்று நடந்த சந்தை நாளில் ஆடு வரத்து வழக்கத்தை விட அதிகமாக இருந்தது. ஆனைமலை, கோட்டூர், நெகமம், வேட்டைக்காரன்புதூர், கோமங்கலம், வடக்கிபாளையம், கிணத்துக்கடவு, உடுமலை உள்ளிட்ட சுற்றுவட்டார கிராமங்களில் இருந்து வெள்ளாடு, செம்மறி ஆடு என இரு வகை ஆடுகள் சுமார் 1000க்கும் மேற்பட்டவை விற்பனைக்கு கொண்டுவரப்பட்டன.

ஆடுகளை வாங்க சுற்றுவட்டார பகுதியில் உள்ள வியாபாரிகள் அதிகளவில் குவிந்தனர். ஆடுவிற்பனை செய்ய வந்தோர் மற்றும் அதனை வாங்க வந்த வியாபாரிகள் கூட்டம் என சந்தை பரபரப்பாக காணப்பட்டது. இதில் 8 கிலோ எடைகொண்ட ஒரு ஆடு 8ஆயிரம் முதல் ரூ.10ஆயிரம் வரையிலும், 25கிலோ எடைகொண்ட ஆடு ஒன்று ரூ.25ஆயிரம் முதல் ரூ.30ஆயிரம் வரையிலும் தரத்திற்கேற்ப விலைபோனது.

அதுபோல், பொள்ளாச்சி மட்டுமின்றி உடுமலை, மடத்துக்குளம் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராம பகுதிகளில் இருந்து பந்தய சேவலும் (கட்டுச்சேவல்) வாரச்சந்தைநாளில் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. நேற்று சுற்றுவட்டார கிராமங்களிலில் இருந்து, பலர் பந்தய சேவலை விற்பதற்காக கொண்டு வந்திருந்தனர். பந்தய சேவல் ஒன்று ரூ.2000 முதல் ரூ.5,500 வரை விலைபோனது. தீபாவளியை முன்னிட்டு பந்தய சேவலை வாங்க, அதிகாலை முதலே அதிகம்பேர் குவிந்திருந்தனர். இதில் பெரும்பாலான வியாபாரிகள் உடுமலை, பழனி, ஒட்டன்சத்திரம் என வெளியூரை சேர்ந்தவர்களாக இருந்தனர். மேலும் மார்க்கெட்டுக்கு கொண்டுவரப்பட்ட நாட்டுக்கோழி விற்பனையும் விறுவிறுப்புடன் நடந்தது.

## தக்காளி விலை தொடர் சரிவு 15 கிலோ ரூ.70க்கு ஏலம் போனது

பொள்ளாச்சி, : பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு தக்காளி வரத்து அதிகரிப்பால், அதன் விலை தொடர்ந்து சரிந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர். பொள்ளாச்சி சுற்றுவட்டார கிராமங்களில் தக்காளி சாகுபடி அதிகளவில் உள்ளது. இந்த ஆண்டில் கடந்த மார்ச், ஏப்ரல் மாதத்தில் கோடை வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்ததால் அந்நேரத்தில் தக்காளி விளைச்சல் குறைந்திருந்தது. பின் தென்மேற்கு பருவமழை பொழிவுக்கு பிறகு, பல்வேறு கிராமங்களில் சாகுபடி செய்யப்பட்ட தக்காளி விளைச்சல் தற்போது அதிகமாக உள்ளது.

இதனால், கடந்த சில வாரங்களாக சுற்றுவட்டார கிராமங்களில் மட்டுமின்றி வெளியூர்களிலும் அறுவடை தீவிரமாக நடக்கிறது. இதை தொடர்ந்து பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு தக்காளி வரத்து மேலும் அதிகரித்துள்ளது. வரத்து அதிகரிப்பின் காரணமாக தற்போது தக்காளி விலை தொடர்ந்து இறங்கு முகாமாகியுள்ளது.

கடந்த வாரத்தில் ஒருகிலோ ரூ.10 முதல் ரூ.12வரை விற்பனை செய்யப்பட்ட தக்காளி, வரத்து தொடர்ந்து அதிகரிப்பால், நேற்று 15கிலோ எடை கொண்ட ஒரு பெட்டி ரூ.70 முதல் ரூ.100வரை மட்டுமே ஏலம் போனது. சராசரியாக மொத்த விலை ரூ.7க்கும், சில்லரை விலை ரூ.9க்கும் விற்கப்படுவதாக வியாபாரிகள் தெரிவித்தனர்

## நீர்பனி பொழிவால் பசுந்தேயிலை மகசூல் அதிகரிப்பு

குன்னூர், : நீலகிரி மாவட்டத்தில் இந்தாண்டு துவக்கத்திலிருந்தே ஆங்காங்கே பரவலான மழை பெய்து வருவதால் தேயிலை மகசூல் அதிகரித்து வருகிறது. இம்மாவட்டத்தில் 63 ஆயிரம் சிறு,குறு தேயிலை விவசாயிகள் உள்ளனர். கடந்த 2 ஆண்டுக்கு முன்பு போதிய மழையின்றி விவசாயிகள் பெரும்பாதிப்படைந்து வந்தனர். இந்நிலையில் இந்தாண்டு பெய்த தொடர் மழையினால் கடந்த 2 ஆண்டை காட்டிலும் 20 சதவீதம் பசுந் தேயிலை மகசூல் அதிகரித்துள்ளது.

இந்நிலையில் ஏல மையங்களில் தேயிலை தூளின் விலை மற்றும் விற்பனை சரிந்து வருவதால் பசுந்தேயிலைக்கு சரியான விலை கிடைக்காமல் விவசாயிகள் கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளனர். கடந்த சில நாட்களாக பகலில் குன்னூர் சுற்றுவட்டார பகுதிகளில் பசுந்தேயிலை மகசூல் அதிகரித்துள்ளது. குளிர்கால தேயிலை தூளுக்கு இந்த பசுந்தேயிலை பயன்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## நெல்சாகுபடி விவசாயிகள் வரப்பு ஓரத்தில் உளுந்து பயிரிட்டு கூடுதல் வருமானம் பெறலாம்

பெரம்பலூர்: பெரம்பலூர் மாவட்ட வேளாண்துறை இணை இயக்குநர் சந்திரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: பெரம்பலூர் மாவட்டத்தில், தற்போது பரவலாக மழை பெய்து வருகிறது. இந்த மழையினைப் பயன்படுத்தி நடப்பு பருவத்தில், நெல் சாகுபடிக்கு ஏற்ற நெல் ரகங்களான கோ-50, கோ-51, ஏடிடி50, ஏடிடி&-45 மற்றும் உளுந்து சாகுபடிக்கு ஏற்ற ரகங்களான சேகர்-1,வம்பன்-5, வம்பன்-6ஆகியவை வட்டாரவேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நெல் லுக்கு கிலோவிற்கு ரு10சதவீதம் மானியமும், தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் உளுந்திற்கு கிலோவிற்கு ரூ25சதவீதம் மானிய விலையில்

வழங்கப்படுகிறது.மேலும், தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் உளுந்து செயல்விளக்கம் அமைக்க எக்டேருக்கு ரூ5ஆயிரமும், மக்காச்சோளம், உளுந்து பயிர்சுழற்சி செயல்விளக்கம் அமைக்க எக்டேருக்கு ரூ10ஆயரமும் மானியமாக வழங்கப்படுகிறது. தேசிய வேளாண் வளர்ச்சித்திட்ட இயக்கத்தின் கீழ் நெல் இயந்திர நடவு செயல் விளக்கம் அமைக்க எக்டேருக்கு ரூ.5ஆயிரமும் மானியம் வழங்கப்படுகிறது. நெல்சாகுபடி செய்யும் விவசாயிகள் தங்களின் வரப்புகளின் ஓரத்தில் உளுந்து பயிரிடுவதன் மூலம் கூடுதல் வருமானமும் நன்மை செய்யும் பூச்சிகளின் எண்ணிக்கையும் பெருக்க முடியும். விவசாயிகளின் விதை மற்றும் இடுபொருள் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்கள் ஒவ்வொரு வாரம் சனிக்கிழமையும் செயல்படும் என தெரிவித்துள்ளார்.

## புதுகை மாவட்டத்தில் வேளாண் திட்ட பணிகள்

புதுக்கோட்டை : புதுகை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் வேளாண் மற்றும் தோட்டக்கலைத்துறை திட்டப் பணிகளை கலெக்டர் கணேஷ் வேளாண் இயக்குநர் தட்சிணாமூர்த்தி, தமிழ்நாடு நீர்வடிப்பகுதி முகமை செயல் இயக்குநர் டாக்டர் அனந்தகுமார் ஆகியோர் முன்னிலையில், வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலர் (வேளாண் துறை) ககன்தீப் சிங்பேடி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதில் கந்தர்வக்கோட்டை வட்டார தெத்துவாசல்பட்டி தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியில் அமைக்கப்பட்டுள்ள புதிய பயிர்க் காப்பீட்டு திட்ட பொதுச்சேவை மையத்தினை பார்வையிட்டு இத்திட்டத்தில் பங்கேற்றுள்ள விவசாயிகளின் எண்ணிக்கை குறித்து ஆய்வு செய்யப்பட்டது. அரியாணிப்பட்டியில் விதை கிராமத்திட்ட நெல் விவசாயிகள் பயிற்சி ஆய்வு செய்து, கையேடுகள் வழங்கப்பட்டது. பின்னர் நெல் வயல் வரப்புகளில் உளுந்து விதை விதைப்பு பணி துவக்கப்பட்டது. விவசாயிகளுக்கு மானிய விலையில் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன. மேலும் சிறுதானிய நுண் சத்து இட்ட நுண்ணீர்ப் பாசன திட்டம் செயல்படுத்தப்பட்ட மக்காச்சோள வயலினை பார்வையிட்டு நுண்ணீர்ப் பாசன பயன்கள் குறித்து விவசாயிகளிடம் கலந்துரையாடப்பட்டது. காடவராயன்பட்டியில் வேம்பு மரக்கன்றுகளை நடவு பணி துவக்கி வைத்தும், முதுகுளத்தில் 5 ஏக்கர் பரப்பளவில் நுண்ணீர் பாசனத்தில் அமைக்கப்பட்டுள்ள பசுந்தாள் உரப்பயிர் சணப்பு வயல் ஆய்வு செய்யப்பட்டது. புனல்குளம், புதுநகரில் நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ் 4.70 எக்டேர் பரப்பளவில்

பயிரிடப்பட்ட மா செடிகளும் பார்வையிட்டு நீர்ப்பாய்ச்சும் முறை கேட்டறியப்பட்டது.

## முத்துப்பேட்டையில் 2,000 பனை மர விதை நடும் நிகழ்ச்சி

முத்துப்பேட்டை : முத்துப்பேட்டை ரோட்டரி சங்கம் சார்பில் இடும்பாவனம் கந்தபரிச்சான் ஆற்றுக்கரையில் 2,000க்கும் மேற்பட்ட பனங்கொட்டைகள் நடப்பட்டது. சங்க தலைவர் கோவி.ரெங்கசாமி கலந்து கொண்டு பணியை துவக்கி வைத்தார். மாவட்ட தலைவர் பாலகிருஷ்ணன் முன்னிலை வகித்தார். இதில் கிராம முக்கிய பிரமுகர் பாலா உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## விவசாயிகள் சங்க மாவட்டக்குழு கூட்டம்

திருவாரூர் : திருவாரூரில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டக்குழு கூட்டம் நடந்தது. மாவட்ட தலைவர் ரங்கராஜன் தலைமை வகித்தார்.

இதில் கடந்த 5 ஆண்டுகளாக குறுவை வருமான இழப்பு, நடப்பாண்டு ஒருபோக சமபா சாகுபடியிலும் வருமான இழப்பு ஏற்பட்டுள்ளதால் காவிரி டெல்டா மாவட்டங்களை வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளாக அறிவித்து தமிழக அரசு உரிய சிறப்பு திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். காவிரி மேலாண்மை வாரியத்தை அமைத்து கர்நாடக அணைகளிலிருந்து தமிழகத்துக்கு தேவையான நீரை பெற்று கொடுக்க மத்திய அரசு தவறியதால் பாதிக்கப்பட்டுள்ள தமிழக விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் இழப்பீடாக வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்திய கம்யூனிஸ்ட் மாவட்ட செயலாளர் செல்வராஜ், விவசாய சங்க மாவட்ட செயலாளர் மாசிலாமணி, மாவட்ட துணை செயலாளர்கள் ஜோசப், சவுந்தரராஜன், மாநிலக்குழு உறுப்பினர்கள் உலகநாதன், ஜெயபால் மற்றும் பொறுப்பாளர்கள் தியாகராஜன், முருகேசன் பங்கேற்றனர்.